**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,**
**ஸ்ரீவில்லிபுத்தூர்**

**OS.No:195/2023** **நாள் 28.04.2026**

**வாசா.2, திரு.சுடலைக்கனி**

**வா.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 2ம் எதிர்வாதி தரப்பில் குறுக்கு விசாரணை—**

எனக்கு எழுதப்படிக்க தெரியாது. இந்த வழக்கை தாக்கல் செய்து கொள்வதற்கு வாதிகளாகிய நாங்கள் மூவரும் தான் வழக்கறிஞர் அவர்களிடம் விபரம் சொன்னோம். 1 முதல் 3 எதிர்வாதிகள் அவர்களுக்குள் அக்கா , தங்கை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் பாட்டி பெயர் பார்வதியம்மாள். அந்த பார்வதியம்மாளின் அப்பா பெயர் மாடசாமி நாடார். பார்வதியம்மாளின் கணவர் பெயர் ருத்திரமாடன். மேற்படி பார்வதியம்மாளின் மகள் தான் மாரியம்மாள் என் தாயார். 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பெயரும் பார்வதியம்மாள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. அந்த பார்வதியம்மாளின் அப்பா பெயர் பலவேசம் நாடார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பார்வதியம்மாளின் கணவர் பெயர் மாடசாமி நாடார். நாங்கள் இவ்வழக்கில் 4 சொத்துக்களை காட்டி தாக்கல் செய்துள்ளோம். இந்த 4 சொத்துக்களும் மேலூர் துரைச்சாமிபுரம் கிராமத்தில் உள்ளது. 4 சொத்துக்களின் விபரம் எனக்கு தெரியாது. மேற்படி 4 சொத்துக்களுக்கும் உரிய சர்வே எண்கள். 433, 429 . சர்வே எண்.433க்குரிய 4 மால்கள் எனக்கு படிக்க தெரியாது என்பதால் தெரியவில்லை. பிராது 1வது அயிட்ட சொத்தும் மற்ற 3 அயிட்ட சொத்துக்களும் மேலூர் துரைச்சாமிபுரம் கிராமத்தில் உள்ளது. என் பாட்டி எந்த ஆண்டு கிரையம் வாங்கினார் என்று எனக்கு தெரியாது என் அப்பா சொல்லிக்கொண்டார். எங்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வாசாஆ.1 கிரைய ஆவணத்தில் என் பாட்டியானவர் என்ன என்ன சொத்துக்களை கிரையம் வாங்கினார் என்றால் எனக்கு படிக்க தெரியாது என்பதால் தெரியவில்லை. வாசாஆ.2 உயில் ஆவணமானது 1986ம் ஆண்டுக்கு உரியது ஆகும். வாசாஆ.2 உயில் ஆவணம் எழுதும் சமயத்தில் என் பாட்டிக்கு வயது 70 இருக்கும். அப்போது என் பாட்டியானவர் உடல்நலம் சரியல்லாமல் படுத்த படிக்கையாக தான் இருந்தார் என்றால் சரிதான். என் பாட்டி உயில் எழுதும் போது எனக்கு நேரில் தெரியாது. என் பாட்டி உயில் எழுதும் போது யார் யார் எல்லாம் உடன் இருந்தார்கள் என்பதை நான் கேட்டு தெரிந்துகொள்ளவில்லை. அந்த உயில் பத்திரத்தில் யார் யார் சாட்சி கையொப்பங்களை செய்துள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. பிராது 1 முதல் 4 அயிட்ட சொத்துக்கள் என் பாட்டி பார்வதியம்மாளுக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிக்ககூடிய சொத்து உரிமை மற்றும் வருவாய்துறை ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்று கேட்டால் தாக்கல் செய்துள்ளோம். பிராது 1 முதல் 4 அயிட்ட சொத்துக்களுக்கு என் பாட்டி பெயரில் எந்தவிதமான கிரைய பத்திரமும் வருவாய் துறை ஆவணங்களும் இல்லை என்றும் வழக்கிற்காக வேண்டி எங்களிடம் உள்ளதாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன்

என்று சொன்னால் அது சரியல்ல. வாசாஆ.2 உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்களுக்கும் இந்த வழக்குரையில் கண்ட சொத்துககளுக்கும் எந்நதவிதமான சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. உயில் ஆவணத்தில் கண்ட சொத்துக்கள் பார்வதியம்மாளுக்கு எப்படி பாத்தியப்படடது என்று சொல்லவில்லை என்பதால் உயில் ஆவணமானது மோசடியாது என்று சொன்னால் அது சரியல்ல. உயில் ஆவணத்தில் என்ன என்ன சொத்துக்களை காண்பிக்கப்பட்டுள்ளது என்று கேட்டால் மொத்தம் 10 சொத்துக்களை காண்பிக்கப்பட்டுள்ளது. உயில் ஆவணத்தை யார் எழுதியது என்று கேட்டால் முனியாண்டி என்பவர் எழுதியிருந்தார் அவர் இறந்துபோய்விட்டார். என் பாட்டி பார்வதியம்மாளுக்கு எழுதப்படிக்க தெரியாது. என் பாட்டி பார்வதியம்மாள் கைரேகை தான் வைப்பார். என் பாட்டி பார்வதியம்மாள் 2001ம் ஆண்டு இறந்துபோனார். என் பாட்டி இறந்தபின்பு வாசாஆ.2 உயில் ஆவணம் யார் வசம் இருந்தது என்று கேட்டால் என் கைவசம் தான் இருந்தது. உயில் ஆவணம் எழுதியது பற்றி என் பாட்டி 2001ம் ஆண்டு இறந்த பின்பு தான் எங்களுக்கு தெரியும். பிராது சொத்துக்கள் எங்களுக்கு உயில் ஆவணம் மூலமாக என் பாட்டி எழுதிக்கொடுத்ததை 2001ம் ஆண்டே தெரியும். 2001ம் ஆண்டு உயில் ஆவணம் மூலமாக சொத்து எங்களுக்கு பாத்தியப்பட்டது என்று நாங்கள் சொல்லும்போது இத்தனை ஆண்டு கழித்து நாங்கள் வழக்கை தாக்கல் செய்ததன் காரணம் என்னவென்று கேட்டால் நாங்கள் விவசாயம் பார்த்து வந்தோம் எங்களுக்கு படிப்பறிவு இல்லை என்பதால் வழக்கு தாக்கல் செய்யவேண்டும் என்று தெரியவில்லை வாசாஆ.2 உயில் ஆவணத்தின் அசல் என் கைவசம் உள்ளது நகலை தான் தாக்கல் செய்துள்ளோம். அசல் உயில் ஆவணத்தை நான் நீதமன்றத்தில் தாக்கல் செய்துகொள்ள தயாராக உள்ளேன். உயில் ஆவணத்தின் நகலை இந்த வழக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் தான் நாங்கள் எடுத்தோம். நாங்கள் தாக்கல் செய்துள்ள பார்வதியம்மாளின் இறப்பு சான்றிதழில் அவருடைய அம்மா, அப்பா பெயர் இல்லை என்று சொன்னால் அது சரிதான். பார்வதியம்மாள் பெயருக்கு முன்னாடி இனிசியல் எதுவும் இல்லை என்று சொன்னால் அது சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழில் பார்வதியம்மாள் எப்படி இறந்தார் என்ற விபரமும் சொல்லவில்லை. இறப்பு சான்றிதழில் பார்வதியம்மாளின் வயதை குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பார்வதியம்மாள் இறக்கும் சமயத்தில் சொக்கநாதன்புத்தூர் முதலியார் தெரு என்று தான் சொல்லியுள்ளது என்றால் சரிதான். மேற்படி இறப்பு சான்றிதழை 16.08.2018ம் ஆண்டு தான் நாங்கள் பெற்றுள்ளோம். நாங்கள் சொல்வது போல் பார்வதியம்மாள் 2001ம் ஆண்டு இறந்து போய் 17 ஆண்டு கழித்து தான் அவரது இறப்பு சான்றை நாங்கள் பெற்றுள்ளோம். வாசாஆ.2 உயில் ஆவணம் எழுதப்பட்டு 34 ஆண்டு காலம் கழித்து தான் நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் அது சரிதான். பார்வதியம்மாளின் இறப்பு சான்றிதழில் முதலியார் தெரு என்றும் உயில் ஆவணத்தில்

சொக்கநாதன் புத்தூர் என்றும் வாரிசு சான்றிதழில் தெற்கு தெரு என்று சொல்லியுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.4 வாரிசு சான்றிதழை 2023ம் ஆண்டு தான் நாங்கள் பெற்றுள்ளோம் என்றால் சரிதான். வாசாஆ.4 வாரிசு சான்றிதழில் கணவர் பெயர் என்ற இடத்தில் திருத்தம் செய்யப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 1 முதல் 3 எதிர்வாதிகளின் தாயார் பார்வதியம்மாள் பிராது தபசில் சொத்துக்களை பொறுத்து 1 முதல் 3 எதிர்வாதிகளுக்கு தான செட்டில்மெண்டு ஆவணமாக பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்று சொன்னால் அந்த விபரம் எனக்கு தெரியாது. நாங்கள் தாக்கல் செய்துள்ள வாசாஆ.12ல் 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயார் பார்வதியம்மாள் 1ம் பிரதிவாதிக்கு பிராது தபசில் சொத்துக்களை தான செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்தி கொடுத்துள்ளார் என்று ஆவணம் தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான் அது போல் வாசாஆ.13 மற்றும் வாசாஆ.14 ஆவணங்கள் மூலமாக 2, 3 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் மூலமாக எழுதிக் கொடுத்துள்ளார் என்று ஆவணங்களை நாங்கள் தாக்கல் செய்துள்ளோம். வாசாஆ.15 பட்டா ஆவணத்தை பொறுத்து 1ம் எதிர்வாதியானவருக்கு பார்வதியம்மாள் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்ததை தான் 5ம் எதிர்வாதியானவர் முறையாக விசாரணை செய்து 1ம் எதிர்வாதிக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த பட்டா எண்.1506 என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ.16 பட்டா ஆவணத்தை பொறுத்து 2ம் எதிர்வாதியானவருக்கு பார்வதியம்மாள் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்ததை தான் 5ம் எதிர்வாதியானவர் முறையாக விசாரணை செய்து 2ம் எதிர்வாதிக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றிஎனக்கு தெரியாது.அந்த பட்டா எண்.1548 என்றால் எனக்கு தெரியாது. வாசாஆ.17 பட்டா ஆவணத்தை பொறுத்து 3ம் எதிர்வாதியானவருக்கு பார்வதியம்மாள் தான செட்டில்மெண்ட் பத்திரம் மூலமாக பாத்தியப்படுத்தி கொடுத்ததை தான் 5ம் எதிர்வாதியானவர் முறையாக விசாரணை செய்து 3ம் எதிர்வாதிக்கு பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றிஎனக்கு தெரியாது.பட்டா எண்.547 என்றால் எனக்கு தெரியாது. 1ம் எதிர்வாதி லட்சுமியம்மாளை எனக்கு தெரியாது. 1ம் எதிர்வாதியானவர் 4ம் எதிர்வாதிக்கு சொத்தை 13.04.2023ம் தேதியில் கிரையம் செய்துகொடுத்துள்ள விபரம் எனக்க தெரியுமா என்று கேட்டால் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது தான் எங்களுக்கு தெரியும் அந்த ஆவணம் வாசாஆ.18 ஆக நாங்கள் தாக்கல் செய்துள்ளோம்.4ம் எதிர்வாதி பெற்ற கிரைய சொத்துக்கு 5ம் எதிர்வாதியானவர் முறையாக விசாரணை செய்து 4ம் எதிர்வாதி பெயருக்கு பட்டா கொடுத்துள்ளார் என்று சொன்னால் அந்த

ஆவணம் தான் வாசாஆ.19 என்று சொன்னால் இந்த வழக்கை தாக்கல் செய்யும் போது தான் எங்களுக்கு தெரியும்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டு இருதரப்பில் வேண்டுதல் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது)**

**சாட்சியின் கையொப்பம்**

**Name of the Interpreter : Not necessary**

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1989 (Central Act 44 of 1989 on the 28th day of April 2026.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.